# பெரியாழ்வார் திருமொழி 4-10
## துப்புடையாரை
(அந்திம காலத்தில் கடாக்ஷிக்கும்படி அப்போதைக்கு இப்போதே பெரிய பெருமாள் திருவடிகளில் சரணம் புகுதல்)

423 * துப்புடையாரை அடைவதெல்லாம் * சோர்விடத்துத்
துணையாவரென்றே *
ஒப்பிலேனாகிலும் நின்னடைந்தேன் * ஆனைக்கு நீ அருள்
செய்தமையால் **
எய்ப்பு என்னை வந்து நலியும் போது * அங்கு ஏதும் நான்
உன்னை நினைக்க மாட்டேன் *
அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன் *
அரங்கத்தரவணைப் பள்ளியானே (1)

424 சாமிடத்து என்னைக் குறிக்கொள் கண்டாய் * சங்கொடு
சக்கரம் ஏந்தினானே *
நாமடித்து என்னை அனேக தண்டம் * செய்வதா நிற்பர்
நமன் தமர்கள் **
போமிடத்து உன் திறத்து எத்தனையும் * புகா வண்ணம்
நிற்பதோர் மாயை வல்லை *
ஆமிடத்தே உன்னைச் சொல்லி வைத்தேன் *
அரங்கத்தரவணைப் பள்ளியானே (2)

425 எல்லையில் வாசல் குறுகச் சென்றால் * எற்றி நமன் தமர்
பற்றும் போது *
நில்லுமின் என்னும் உபாயமில்லை * நேமியும் சங்கமும்
ஏந்தினானே **
சொல்லலாம் போதே உன் நாமம் எல்லாம் * சொல்லினேன்
என்னைக் குறிக் கொண்டு என்றும் *
அல்லல்படா வண்ணம் காக்க வேண்டும் *
அரங்கத்தரவணைப் பள்ளியானே (3)

426 ஒற்றை விடையனும் நான்முகனும் * உன்னை அறியாப்
பெருமையோனே *
முற்ற உலகெல்லாம் நீயேயாகி * மூன்றெழுத்தாய
முதல்வனேயோ **
அற்றது வாணாள் இவற்கென்றெண்ணி * அஞ்ச நமன்
தமர் பற்றல் உற்ற *
அற்றைக்கு நீ என்னைக் காக்க வேண்டும் *

அரங்கத்தரவணைப் பள்ளியானே (4)

427 பையரவினணைப் பாற்கடலுள் * பள்ளி கொள்கின்ற பரம
மூர்த்தி *
உய்ய உலகு படைக்க வேண்டி * உந்தியில் தோற்றினாய்
நான்முகனை **
வைய மனிசரைப் பொய்யென்றெண்ணிக் * காலனையும்
உடனே படைத்தாய் *
ஐய இனி என்னைக் காக்க வேண்டும் *
அரங்கத்தரவணைப் பள்ளியானே (5)

428 தண்ணெனவில்லை நமன் தமர்கள் * சாலக் கொடுமைகள்
செய்யா நிற்பர் *
மண்ணொடு நீரும் எரியும் காலும் * மற்றும் ஆகாசமுமாகி
நின்றாய் **
எண்ணலாம் போதே உன் நாமம் எல்லாம் * எண்ணினேன்
என்னைக் குறிக்கொண்டு என்றும் *
அண்ணலே நீ என்னைக் காக்க வேண்டும் *
அரங்கத்தரவணைப் பள்ளியானே (6)

429 செஞ்சொல் மறைப் பொருளாகி நின்ற * தேவர்கள்
நாயகனே எம்மானே *
எஞ்சலில் என்னுடை இன்னமுதே * ஏழுலகும் உடையாய்
என்னப்பா **
வஞ்ச உருவின் நமன் தமர்கள் * வலிந்து நலிந்து
என்னைப் பற்றும் போது *
அஞ்சலமென்று என்னைக் காக்க வேண்டும் *
அரங்கத்தரவணைப் பள்ளியானே (7)

430 நான் ஏதும் உன் மாயம் ஒன்றறியேன் * நமன் தமர் பற்றி
நலிந்திட்டு * இந்த
ஊனே புகேயென்று மோதும்போது * அங்கேதும் நான்
உன்னை நினைக்க மாட்டேன் *
வானேய் வானவர் தங்கள் ஈசா * மதுரைப் பிறந்த
மாமாயனே * என்
ஆனாய் நீ என்னைக் காக்க வேண்டும் *
அரங்கத்தரவணைப் பள்ளியானே (8)

431 குன்றெடுத்து ஆனிரை காத்த ஆயா * கோனிரை மேய்த்தவனே

எம்மானே *
அன்றுமுதல் இன்றறுதியா * ஆதியஞ்சோதி மறந்தறியேன் **
நன்றும் கொடிய நமன் தமர்கள் * நலிந்து வலிந்து என்னைப்
பற்றும் போது *
அன்றங்கு நீ என்னைக் காக்க வேண்டும் *
அரங்கத்தரவணைப் பள்ளியானே (9)

432 * மாயவனை மதுசூதனனை * மாதவனை மறையோர்கள்
ஏத்தும் *
ஆயர்கள் ஏற்றினை அச்சுதனை * அரங்கத்தரவணைப்
பள்ளியானை **
வேயர் புகழ் வில்லிபுத்தூர்மன் * விட்டுசித்தன் சொன்ன
மாலை பத்தும் *
தூய மனத்தனராகி வல்லார் * தூமணி வண்ணனுக்காளர்
தாமே (10)